DINA MALAR 02/02/2010

DINA MALAR 02/02/2010

# ஓஜஸ் வழங்கும் 'ஜனனி'

சென்னை, பிப். 2-

'கருப்பையில் இருக்கும்போதே கற்கும் முறையை அறிமுகப்படுத்தி, உணர்ச்சிபூர்வ மான, திறமையான மனித சமுதாயத்தை உரு வாக்க உள்ளதாக, ஓஜஸ் பவுண்டேஷன் நிறு வனர் தத்வமசி தீக்ஷித் தெரிவித்தார்.

இதுகுறித்து வெளியிடப்பட்ட செய்தி:

வேத ஆராய்ச்சி அமைப்பான ஓஜஸ் பவுண்டேஷன், கர்ப்பமுற்ற பெண்க ளுக்காக, 'ஜனனி' என்ற ஒரு திட்டத்தை அறிமு கப்படுத்தியுள்ளது.

தாய்மை நிலையை வடிவமைப்பது, தாயின் உடல் மற்றும் உணர்வு ரீதியான ஆரோக்கி யத்தை வலுப்படுத்தல், யோகா, பிராணாயா மம் மற்றும் தியானம் ஆகியவை, இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்.

தாய்மை நிலை என்பது புதிய அனுபவம் என்பதால், புதிதாக கர்ப்பமடையும் பெண்க ளுக்கு, அதிக மன அழுத்தம் ஏற்படும். இதை நீக்க, 'ஜனனி' திட்டம் உதவும்.

இதில் பங்கேற்பவர்களின் தேவை மற்றும் ஆர்வத்திற்கு ஏற்ப, இத்திட்டத்தில் மூன்று வித, 'பேக்கேஜ்'கள் உள்ளன. கர்ப்பமுற்ற ஒவ்வொரு பெண்ணும் சிறப்பானவர், அவரு டைய தேவை, வித்தியாசமானதாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு, இத்திட்டம் உரு வாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த செய்தியில் கூறப் பட்டுள்ளது.